**ஹொரண நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மாார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரண நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டிற்குரிய மீளய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 8,060,134 தொகையான சம்பள மீளளிப்பு மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறைபாடுகளை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய உறுப்பினர்படி ரூபா 1,710,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,515,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறைபாடுகள் சரிசெய்யப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் நலன்புரிச் சேவை நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய மூலதன சொத்துக்களை பழுதுபார்த்தல் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 462,139 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,039,348 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் காசேட்டின் மீதி ரூபா 48,258 தொகை அதிகரித்தும் மற்றும் ஊழியர் கடன், காசுப் புத்தகத்தில் மீதி ரூபா 23,566 தொகை குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டில் கடன் அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 246,000 பெறுமதியான தளபாடம் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | மீளாய்வாண்டிற்குரிய செயற்திட்ட செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 536,035 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதியப் பணிப்பாளருக்குச் செலுத்தப்பட வேண்டிய பணம் ரூபா 207,237 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 53,401 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நானாவித கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 153,836 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 36,000 பெறுமதியான பிரிண்டர் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | இருப்புப் பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்குப் | இருப்புப் பெறுமதியாக | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு |

| | | |
|---|---|---|
| பதிலாக ரூபா 2,421,971 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்புப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 93,652,478 தொகையான 08 கணக்கு மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 95,473,837 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பீடு செய்து சீராக்கப்பட வேண்டும். | வேறுபாடுகளுக்குரிய தரவுகளை கண்டறிவதற்கு ஆவணக் காப்பகத்தில் தகவல்கள் காணப்படவில்லை. |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட ஆதன பதிவேடு, முற்பண பதிவேடு மற்றும் பட்டோலைகள் இன்மையினால் ரூபா 6,612,315 கூட்டுப் பெறுமதியான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ஆதனவரி பதிவேடு நாளதுவரையாக் கப்பட வேண்டி இருந்ததுடன் முற்பண மீதிக்குரிய சரியான பட்டோலை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முற்பணத்திற்காக பட்டோலை தயாரிப்பதற்கான தகவல்கள் காணப்படாமையினால், கணனி முறைமையில் உள்ள வழுவின் காரணமாக ஆதனவரிப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு முடியாதிருந்தது. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(அ)(2) ஆம் பிரிவு | 6,320,391 | சபைக்கு அறவிட வேண்டிய சகல வருமானங்களும் மற்றும் தண்டப்பணமும் அறவிடப்பட்டு சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | 1,186,209 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்பட வில்லை. |
| (இ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரம் | - | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 07 இடங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. | வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் | 756,950 | 131 விளம்பர அறிவித்தல் பதாதைகளில் இருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,105,742 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,311,671 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடைமுறைக் கணக்கில் 2009 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 99,885 தொகையான மீதியொன்று விளைவற்றுக் காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய பணத்தை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். | இந்தப் பணத்தை ஈடுபடுத்தி செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு கலந்துரையாடப் படுகின்றது. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 15,800,000 | 15,638,334 | 13,517,038 | 4,836,766 | 15,750,000 | 15,527,405 | 15,219,338 | 2,884,000 |
| (ii) | வாடகை | 8,952,100 | 8,494,064 | 6,382,925 | 2,597,165 | 8,815,072 | 8,910,082 | 6,874,275 | 2,717,003 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,931,500 | 1,941,300 | 1,585,700 | 383,100 | 2,200,000 | 2,014,260 | 1,996,260 | 30,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,842,000 | 10,873,887 | 553,719 | 10,320,168 | 760,000 | 1,012,889 | 748,486 | 264,403 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை மீதி ரூபா 2,872,864 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது அதில் ரூபா 1,679,381 தொகை அதாவது 58 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதனவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | ஆண்டின் சிட்டையிடப்பட்ட ரூபா 14,842,534 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 12,683,201 தொகை அதாவது 85 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவையான ரூபா 4,112,277 இல் ரூபா 1,377,203 தொகை 2019 மே 28 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் நிலுவை ரூபா 2,735,074 ஆகக் காணப்பட்டது. | நிலுவை ஆதனவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதனவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நிலுவை ஆதனவரிக்காக காலப்பகுப்பாய்வு வழங்கப்படவில்லை. | நிலுவை ஆதனவரிக்கு காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும். | பயன்படுத்தப்படுகின்ற கணனி மென்பொருள் முறைமை மூலம் காலப்பகுப்பாய்வைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் காலப்பகுப்பாய்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3.3 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை கடை வாடகை ரூபா 2,823,269 ஆக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவையில் ரூபா 179,599 தொகை அறவிடப்படாத மீதிப் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் ஆண்டின் போது அந்த நிலுவை வாடகையில் ரூபா 432,865 தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் நிலுவை ரூபா 484,385 ஆகக் காணப்பட்டது. | | பதிவேட்டில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் மிகுதி நிலுவையான ரூபா 304,785 தொகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 8,916,493 ஆக இருந்ததுடன் 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 1,277,963 தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.3.4 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் பெறப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 10,000,000 ஆகும். | முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு பட்டோலை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உபவிதிகள்<br>நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 14 விடயங்களுக்காக உப விதி விதிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களுக்காக மாத்திரம் உப விதி விதிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டம்<br>-------------------------------------------------- | | |
| (i) | சபையினால் 2018 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் ரூபா 208.24 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு 10 பிரிவுகளின் கீழ் 260 செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகளின் செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்யும் முறைமையொன்று சபையிடம் காணப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | சபையினால் 2018 ஆம் ஆண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 208.24 மில்லியன் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 21.83 மில்லியன் நிதிஏற்பாடு மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கட்டுநிதித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு பிரிவிற்கும் உரியதாக முன்னுரிமையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |
| (iii) | சபை வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4.4 மில்லியன் நிதிஏற்பாட்டை விஞ்சி 41 செயற்திட்டங்களுக்காக ரூபா 23.48 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரமின்றி ரூபா 19.08 மில்லியன் தொகையான செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். | உறுப்பினர்கள் ஒன்று கூடி பொதுக்கூட்டத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்ப செயற்பாட்டு நடவடிக்கைகளை கையேற்று அவர்களின் கொள்கை தீர்மானத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படும். |

(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| சபை அதிகாரப்பிரதேசத்தில் சேமிக்கப்படுகின்ற உக்காத கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமை மற்றும் அந்த பணிகளுக்குப் புறம்பான தரப்பினரை விருவித்து மேற்கொள்ளப்பட்டமையால் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 31,250,113 தொகையான கணிசமான செலவினம் சபையினால் செலவிடப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருள் வரிகளில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 1,520,011 மாத்திரமாக இருந்தது. | கழிவுப்பொருள் அகற்றும் போது ஏற்பட்ட கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுப்பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகள் முறையான வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அமுல்படுத்தல் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பக சபை அறிந்திருந்த போதிலும், அது நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக புதிய உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புதற்காக நீண்டகாலத் திட்டம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | வறுமையிலுள்ள 04 குடும்பங்களுக்கு உதவி வழங்கும் அடிப்படையில் பால் / கஞ்சி கோப்பை வழங்குதல் மற்றும் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தலுக்கும் 02 உடற்பயிற்சி நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயலாளர் பதவியின் வேலை மேவுகைக்கு முகாமைத்துவ உதவியாளர் அதிவிசேட தரத்தின் உத்தியோகத்தர் | பதவியணியின் வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| நியமிக்கப்பட்டிருந்தார். | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) 2019 மே 31 ஆந் திகதி வரையில் சபையின் மூன்றாம் நிலையில் ஒரு பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. | பதவியணியின் வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) சபையில் நூலகர், வருமானப் பரிசோதகர், தரவு செயற்படுத்துனர், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர், விளையாட்டரங்கு பொறுப்பாளர், சுகாதார பரிசோதகர் போன்ற பதவிகளில் ஒருவர் வீதமும், 03 தீயணைப்பு பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையில் 14 பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியின் வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 பெறுகை

### 3.3.1 பெறுகைத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்தப் பாதீட்டின் மூலம் மூலதனச் செலவினத்தின் கீழ் ரூபா 27.65 மில்லியன் நிதிஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைத் திட்டம் தயாரிக்கும் போது ரூபா 2.55 மில்லியன் கிரயமான 04 நிகழ்ச்சித்திட்டங்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பாதீட்டில் குறிப்பிடப்பட்ட மூலதன செலவினங்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறுவர் விளையாட்டு மைதானத்தில் ஒரு பகுதி வெளித்தரப்பினரால் அனுமதியற்ற வகையில் விற்பனைக் கடையொன்று நடாத்திச் செல்லப்பட்டதுடன் அதனை அகற்றுவதற்காக சபை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்களை உடைந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | வேவல முன்பள்ளி பாடசாலை அமைந்துள்ள சபைக்குரிய 10 பேர்ச் அளவான காணி வெளித்தரப்பினரால் அனுமதியற்ற முறையில் கைப்பற்றப்பட்டிருந்தது. | அனுமதியற்ற உரித்து சபைக்கு பெறப்பட வேண்டும். | அனுமதியற்ற உரித்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | 1994 ஆம் ஆண்டின் போது சொறணவத்த ஏல விற்பனைக் காணியில் பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 02 றூட் 06 பேர்ச் காணிப்பகுதி அடுத்துள்ள காணி உரிமையாளரால் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. | அனுமதியற்ற உரித்து சபைக்கு பெறப்பட வேண்டும். | அனுமதியற்ற உரித்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | நகர சபை பயன்படுத்துகின்ற ஹொரண நூலகக் கட்டிடம் அமைந்துள்ள காணி, ஹொரண நகர சபைக் கட்டிடம் மற்றும் காணி, பொது விளையாட்டு மைதானம், சிறுவர் விளையாட்டு தைமதானம், சிறுவர் | உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கையளித்தல் கட்டளை வழங்குமாறு 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி பிரதேச செயலாளருக்கு உரிய விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |

விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள முன்பள்ளிப் பாடசாலை மற்றும் தீயணைப்புப் பிரிவு அமைந்துள்ள காணி என்பவற்றுக்காக உரித்துறுதி காணப்படவில்லை.